செய்தி வெளியீடு எண் :1055 நாள் : 26.07.2024

# செய்தி வெளியீடு

இன்று (26.07.2024) சென்னை, தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் தலைமையில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறைத் தலைமை அலுவலர்களுடன் துறைச் செயல்பாடுகள் தொடர்பாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறையின் கடந்த மூன்று ஆண்டுகளின் சட்டமன்ற அறிவிப்புகளில் முழுமையாக நிறைவேற்றப்பட்ட திட்டப்பணிகள் போக நிறைவேற்றப்பட வேண்டிய அறிவிப்புகளின் தற்போதைய நிலை, 2024-25 ஆம் ஆண்டு சட்டமன்ற அறிவிப்புகள் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், துறைப் பணியாளர்களின் பதவி உயர்வு, காலி பணியிடங்களை நிரப்புதல், பயிற்சி, ஒழுங்கு நடவடிக்கைகள், மேல் முறையீடுகள், நீதி மன்ற வழக்கு விவரங்களையும், சிறப்பு பொது விநியோகத் திட்டப் பொருட்களான துவரம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவற்றின் கடந்த மூன்று மாதங்களுக்கான நகர்வு மற்றும் நுகர்வினை ஆய்வு செய்தார். கே.எம்.எஸ் 2023-2024 -ஆம் ஆண்டில் இதுவரையில் 32.47 இலட்சம் மெ.டன். நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதற்கு பாராட்டுக்கள் தெரிவித்து, நெல் கொள்முதலில் எவ்வித புகாருக்கும் இடமளிக்காமலும், அனைத்து விவசாயிகளுக்கும் உடனுக்குடன் கொள்முதலுக்கான தொகையினை விடுவிக்க வேண்டுமெனவும், கழக நவீன அரிசி அரவை ஆலைகளின் அரவைத் திறனை அதிகப்படுத்திட வேண்டுமெனவும், ஒன்றிய அரசிடமிருந்து பல்வேறு இனங்களில் பெறப்பட வேண்டிய மானியத் தொகையினை உடனடியாக பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும், அமுதம் அங்காடிகளை நவீனப்படுத்தி விற்பனையை அதிகப்படுத்திடவும், வட்ட செயல்முறைக் கிடங்குகளில்

பழுதுபார்க்க வேண்டியிருப்பின், உடனடியாக பழுதுபார்த்து கிடங்கின் முழுக் கொள்ளளவினையும் பயன்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தினார்.

உலகிற்கே முன்னோடியான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்திற்கு தேவையான அரிசி, துவரம் பருப்பு மற்றும் பாமாயில் போன்ற அத்தியாவசியப் பொருள்களின் தரத்தினை உறுதி செய்து எவ்வித புகாருக்கும் இடமளிக்காமல் உடனுக்குடன் நகர்வு செய்திட அறிவுறுத்தினார்.

தற்போது பொதுமக்களிடம் நுகர்வு பயன்பாடு பெருமளவில் பெருகிவருவதால் நுகர்வோர் விழிப்புணர்வு தொடர்ந்து வழங்குவதனை உறுதி செய்ய வேண்டுமெனவும் அவ்வகையில் மாநில மற்றும் மாவட்ட அளவில் கருத்தரங்குகள் நடத்தப்பட வேண்டுமெனவும், முன்மாதிரி அங்காடிகளாக நியாய விலைக் கடைகளை மாற்றுவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தினை ஆய்வு செய்தும், ஒவ்வொரு பகுதியிலும் குடும்ப அட்டைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப தேவைப்படும் இடங்களில் புதியதாக பகுதி மற்றும் முழு நேர நியாய விலை அங்காடிகளை திறக்க வேண்டுமெனவும், தகுதி வாய்ந்த நபர்களுக்கு புதிய குடும்ப அட்டைகளை விரைந்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் அனைத்துப் பொருட்களும் நியாய விலை அங்காடிகளில் இருப்பதை உறுதி செய்து ஒரே நேரத்தில் அனைத்துப் பொருட்களும் குடும்ப அட்டைதாரர்களுக்கு கிடைத்திடும் வகையில் ஒதுக்கீடு செய்திடவும் அறிவுறுத்தினார்.

குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை அலுவலர்கள் மாநில எல்லைப் பகுதியிலுள்ள பிற மாநிலங்களின் அலுவலர்களுடன் அடிக்கடி கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்தி, அரிசிக் கடத்தலை அறவே தடுத்திட வேண்டுமென்றும் அறிவுரைகள் வழங்கினார்.

சேமிப்புக் கிடங்கு நிறுவன, கிடங்குகளின் கொள்ளளவு பயன்பாட்டினை அதிகரித்து புதிய கிடங்குகள் மற்றும் குளிர் சாதன வசதியுள்ள கிடங்குகள் கட்டிட நடவடிக்கை மேற்கொண்டு வருவாயினை அதிகப்படுத்திட வேண்டுமெனவும் அறிவுறுத்தினார்.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ . ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவுரைகளை பின்பற்றி, பொது விநியோகத்திட்டம் மேலும் சிறப்பாகச் செயல்படுத்திட அனைத்து அலுவலர்களும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிர்வாக இயக்குநர் திரு.எஸ்.பழனிசாமி, இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் திரு. ஆ.அண்ணாதுரை, இ.ஆ.ப., உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இயக்குநர் திரு. த.மோகன், இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் திருமதி. ப. காயத்ரி கிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக பொது மேலாளர் (சந்தை) திரு.ரெ. சதிஷ்,இ.ஆ.ப., குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுக் காவல்துறைத் தலைவர் திரு.க.ஜோஷி நிர்மல் குமார், இ.கா.ப., மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu